# செயலாற்றுகை அறிக்கை - 2015

## அரசிறைக் கொள்கைகள் திணைக்களம்

## பொதுத் திறைசேரி

# தொலை நோக்கு

**நிலைபேறான அரசிறைக் கொள்கையொன்று**

**வகுத்தமைக்கப்படுவதை உறுதி செய்தல்**

# பணிக்கூற்று

**அரசின் அகல் விரிவான அபிவிருத்திச்**

**செயற்பாட்டு வரையறையினுள் அரசிறைக்**

**கொள்கையை வகுத்தமைத்தலும்**

**அமுல்படுத்தலும்**

# பணிகள்

- தனிப்பட்ட, அரசாங்க மற்றும் சர்வதேச பிரதிநிதிகளை ஒருங்கிணைத்து நடுத்தர கால வரவு செலவுத் திட்ட சட்டகத்தினுள் அரசிறைக் கொள்கையை வகுத்தமைத்தலும் அமுல்படுத்தலும்.

- வரிக்கொள்கை மற்றும் அதனோடு தொடர்பான பிற சட்ட ஏற்பாடுகளை தயாரித்தல். (சுங்கத்தீர்வை மற்றும் பிற விசேட பொருட்களுக்கான வரி நீங்கலாக)

- அரசாங்க வருமானம் மற்றும் பெறுகை உள்ளடங்கலாக அரசிறை எண்ணக்கருக்கள் மற்றும் அரசிறைச் செயற்பாடுகளினை முகாமை செய்தலும் விதப்புரை செய்தலும்.

- அனைத்து அறிக்கையிடல்களும் உள்ளடங்கியதாக 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவப் பொறுப்புச் சட்டத்தினை செயற்படுத்துதல்.

# உள்ளடக்கம்

---

**பக்கம்**


1. அரசிறைஅபிவிருத்திகள் - 2015 1

2. செயலாற்றுகை - 2015 7

3. நிர்வாகம் மற்றும் கணக்குகள் 17

# 1.அரசிறைக் கொள்கையின் செயலாற்றுகை – 2015

## 1.1 மேன்நோக்கு

நாட்டின் அரசிறை வளர்ச்சிப் போக்கினை அரசாங்கம் முன்னெடுத்த போதிலும், 2015 இல் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் காணப்பட்ட பாதகமான பொருளாதார சூழ்நிலை காரணமாக இச்செயன்முறையானது சவால் நிறைந்ததாகக் காணப்பட்டது. எதிர்பார்த்தனை விட அரசாங்கத்தின் வருமான செயலாற்றுகை குறைவான நிலையில் மிகக்குறைந்த வருமான அடிப்படையினைக் கொண்டு காணப்பட்டதுடன் மீண்டெழும்செலவினங்களின் அதிகரிப்பு மற்றும் கல்வி, சுகாதாரத் துறைகளுக்கான உயர்ந்தளவு வளங்களின் கேள்வி அரசிறை வளர்ச்சிப் போக்கில் அழுத்தத்தினை ஏற்படுத்தியது. 2015 – 2018 நடுத்தர கால பேரண்ட அரசிறை வேலைச் சட்டகத்தில் குறிப்பிடப்பட்டவாறு 2015 இல் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையானது மொ.உ.உற்பத்தியில் 5.6 சதவீதமாக குறைவடையுமென அரசாங்கம் எதிர்பார்த்த போதிலும் 2014 இல் பதிவாகிய 5.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொ.உ. உற்பத்தியில் 7.4 சதவீதமாக அதிகரித்த பற்றாக்குறையுடன் 2015 இல் அரசிறை இலக்குகளிலிருந்து குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி காணப்பட்டது. வெளிநாட்டு நிதியளிப்பு மொத்த நிதியளிப்பின் 28.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பற்றாக்குறையானது 2015 இல் உள்நாட்டு மூலங்கள் (71.5 சதவீதம்) மூலம் நிதியளிக்கப்பட்டது. இவ் வீழ்ச்சிக்கான காரணம் அதிகரித்த அரசாங்கத் துறை சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் என்பவற்றுடன் இணைந்து அதிகரித்த மீண்டெழும் செலவினத்துடன் வரி வருமானம் குறைவடைந்து காணப்பட்ட அதேவேளை, அதிகரித்த வட்டி மற்றும் மாற்றல் கொடுப்பனவுகளும் அதிகரித்தமை காரணமாகும். அதேவேளை, மொ.உ. உற்பத்தியில் 2014 இல் 70.7 சதவீதத்திலிருந்து 2015 இல் 76.0 சதவீதமாக அதிகரத்துள்ள அரசாங்கப் படுகடன் காரணமாக அரசிறை வளர்ச்சியானது மேலும் குறைவடைந்தது. அதேவேளை, பொருளாதார வளர்ச்சியுடன் ஒத்த வகையில் மொ.உ.உற்பத்தி விகிதத்தில் வரி வருமானத்தினை அதிகரிக்கச் செய்ய வேண்டிய முக்கியத்துவம் உணரப்பட்டதனால் அரசாங்கம் வரி விலக்களிப்புகளினை குறைத்தல், வரி முறைமையினை இலகுபடுத்தல், வரி அடிப்படையினை விரிவாக்குவதுடன் வரி நிர்வாகத்தினை ஸ்திரப்படுத்தல் போன்ற பல்வேறு கொள்கை நடவடிக்கைகளை 2015 இல் முன்னெடுத்தது.

இதன் விளைவாக, 2015 இல் மொ.உ.உற்பத்தி விகிதமாக மொத்த அரசாங்க வருமானம் அதிகரித்ததுடன் கடந்த சில வருடங்களாக காணப்பட்ட வீழ்ச்சிப் போக்கில் திருப்பமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய வருடத்தில் சில சம்பாதிக்கப்பட்ட இலாபங்கள் மீது அறவிடப்பட்ட ஒற்றை வரியான அதி ஈட்ட வரியிலிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 50 பில்லியன் மூலம் கிடைக்கப்பெற்ற நன்மையினால் வரி வருமானம் 10.1 சதவீதத்திலிருந்து 12.1 சதவீதமாக அதிகரித்த அதேவேளை, 2014 இல் 11.4 சதவீதத்திலிருந்து 2015 இல் 13.0 சதவீதமாக இவ்விகிதம் அதிகரித்தது. எவ்வாறாயினும், வரியல்லாத வருமானம் 2014 இல் 1.4

சதவீதத்திலிருந்து 0.9 சதவீதமாக குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. சாதாரண நிலைமைகளின் போது அரசாங்கத்தின் வருமானம் 2014 இல் ரூபா 1,195.2 பில்லியனிலிருந்து 2015 இல் ரூபா 1,455.9 பில்லியனாக 21.7 சதவீதத்தினால் அதிகரித்தது. மொத்த வரி வருமானம் 2014 இல் ரூபா 1,050.4 பில்லியனிலிருந்து 2015 இல் ரூபா 1,355.8 பில்லியனாக 29.1 சதவீதத்தினால் அதிகரித்தது.

அரசாங்கத்தின் செலவினம் தொடர்பாக மொத்த செலவினமானது மொ.உ.உற்பத்தி சதவீதத்தில் 2014 இல் 17.2 சதவீதத்திலிருந்து 2015 இல் 20.5 சதவீதமாக அதிகரித்தது. இதற்கான பிரதான காரணம் அரசாங்க ஊழியர்களது சம்பளம், வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் மானியங்கள் மற்றும் மாற்றல்கள் என்பன அதிகரித்ததனால் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் மீதான செலவினங்கள் அதிகரிக்கப்பட்டு 2014 இல் 12.7 சதவீதத்திலிருந்து 2015 இல் 15.2 சதவீதமாக மீண்டெழும் செலவினம் அதிகரித்தமை காரணமாகும். சாதாரண நிலைமைகளின் போது மீண்டெழும் செலவினமானது 2014 இல் காணப்பட்ட ரூபா 1,322.9 பில்லியனிலிருந்து 2015 இல் ரூபா 1,701.2 பில்லியனாக 28.6 சதவீதத்தினால் மீண்டெழும் செலவினம் அதிகரித்தது. அதேவேளை, மூலதனச் செலவினமும் தேறிய கொடுப்பனவும் 2014 இல் 4.5 சதவீதத்திலிருந்து 2015 இல் 5.3 சதவீதமாக சாதாரண நிலைமைகளில் ரூபா 388.7 பில்லியனாக 24.5 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கு மேலதிகமாக, அரசாங்க முதலீடு 2014 இல் 4.7 சதவீதத்திலிருந்து 2015 இல் 5.4 சதவீதமாக சிறிதளவு அதிகரிப்பினை காட்டியது. 2015 இல் மொத்த வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையானது இலக்கிடப்பட்ட ரூபா 516 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 829.5 பில்லியனாக குறிப்பிடத்தக்களவு அதிகரித்துக் காணப்பட்டது.

### 1.2 அரசாங்க வருமானம்

அரசாங்கத்தின் மொத்த வருமானம் 2014 இல் பதிவாகிய 11.4 சதவீதத்திலிருந்து 2015 இல் 13.0 சதவீதமாக அதிகரித்த அதேவேளை வரி வருமானம் முன்னைய வருடத்தில் காணப்பட்ட 10.1 சதவீதத்திலிருந்து 12.1 சதவீதமாக அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், வரியல்லாத வருமானம் மொ. உ. உற்பத்தி சதவீதமாக 2014 இல் காணப்பட்ட 1.4 சதவீதத்திலிருந்து 0.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. 2015 இல் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் 1,454.9 பில்லியனாக 21.7 சதவீதத்தினால் அதிகரித்தது. சாதாரண நிலைமையில் இது 2014 இல் ரூபா 1,195.2 பில்லியனாக காணப்பட்டது.


#### வரி வருமானம்

மொ.உ.உற்பத்தி விகிதமாக அரசாங்க வருமானம் அதிகரித்ததுடன், கடந்த சில வருடங்களாக காணப்பட்ட வீழ்ச்சிப் போக்கில் திருப்பமொன்று ஏற்பட்டதோடு முன்னைய வருடத்தில் சில சம்பாதிக்கப்பட்ட இலாபங்கள் மீது அறவிடப்பட்ட ஒற்றை வரியான அதி ஈட்ட வரி மற்றும் மோட்டார் வாகனம் மீதான உற்பத்தி வரி என்பனவற்றிலிருந்து கிடைக்கப்பெற்ற அதிகரித்த வரி வருமானம் காரணமாக 2014 இல் பதிவாக்கிய 10.1 சதவீதத்திலிருந்து 2015 இல் 12.1 சதவீதமாக வரி வருமானம் அதிகரித்துள்ளது. மொத்த வருமானத்தில் வரி

வருமானத்தின் பங்கும் 2014 இல் பதிவாக்கிய 87.9 சதவீதத்திலிருந்து 93.2 சதவீதமாக 2015 இல் அதிகரித்துள்ளது. உள்நாட்டு நுகர்வினை அடிப்படையாகக் கொண்ட வரிகள் 2014 இல் காணப்பட்ட ரூபா 298 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015 இல் ரூபா 347.6 பில்லியனாக 16.7 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை இறக்குமதித் தீர்வைகள், விசேட நுகர்வுப் பொருள் அறவீடு மற்றும் துறைமுகங்கள் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு போன்ற இறக்குமதி அடிப்படையிலான வரிகளும் 36.7 சதவீதத்தினால் அதிகரித்ததற்கான காரணம் மோட்டார் வாகனங்கள் மற்றும் உணவுப் பொருட்கள் உள்ளடங்கலாக நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி அதிகரிக்கப்பட்டமையுமாகும். அதேவேளை, நிறுவன மற்றும் நிறுவனமல்லாத வரிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 167.3 பில்லியனாக 67.2 சதவீதத்தினால் அதிகரித்தது. அதில் 2015 இல் இலாபங்கள் மீது விதிக்கப்பட்ட ஒற்றை வரியிலிருந்து பெறப்பட்ட ரூபா 50 பில்லியனும் காணப்பட்ட அதேவேளை, சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக உழைக்கும் போது செலுத்தும் வரியிலிருந்து வரி வருமானம் ரூபா 22.3 பில்லியனிலிருந்து ரூபா 26.2 பில்லியனாக 17.5 சதவீதத்தினால் அதிகரித்தது. எவ்வாறாயினும், குறித்த வருடத்தின் போது திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் விநியோகிக்கப்பட்டமை குறைவடைந்தமையினாலும் இதே காலப்பகுதியில் பொருளதார சேவைக் கட்டணம் ரூபா 6.1 பில்லியனாக 0.1 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தமையினால் வட்டி வருமானம் மீதான வரியானது 2015 காலப்பகுதியில் ரூபா 62.9 பில்லியனாக 9.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

**வரியல்லாத வருமானம்**

வரியல்லாத வருமானம் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015 இல் ரூபா 99.1 பில்லியனாக 31.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. மத்திய வங்கியின் இலாப மாற்றல்கள் இடம்பெறாமை மற்றும் அரச உடமைத் தொழில்முயற்சிகளின் இலாபங்கள் மற்றும் மாற்றல்கள் என்பனவும் இதற்கு காரணமாக அமைந்தது. இவ்வீழ்ச்சி காரணமாக மொ.உ. உற்பத்தியில் வரியல்லாத வருமானம் 2014 இல் பதிவாக்கிய 1.4 சதவீதத்திலிருந்து 2015 இல் 0.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.




**அட்டவணை 1 : அரசாங்க வருமானத்தின் மாறல் பகுப்பாய்வு – 2015 (ரூபா. மில்)**

| விடயம் | 2014 | 2015 மதிப்பீடு | 2015 | காரணம் |
|---|---|---|---|---|
| வருமான வரி | **198,115** | **252,600** | **262,583** | அதியீட்டு வரி மூலம் திரட்டப்பட்ட வருமானம் காரணமாக 2015 ஆம் ஆண்டில் வரி வருமானம், மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை விட அதிகரிப்பதற்கு முடிந்துள்ளது. சுற்றுலாத் துறை தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொழிற் சேவை போன்ற உயர் வருமானம் ஈட்டும் தொழில்கள் அதிகரித்தமையினாலும், அரச மற்றும் தனியார் துறையில் சம்பள அதிகரிப்பினாலும் உழைக்கும் போது செலுத்தும் வரி குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், ஒப்பீட்டளவில் வட்டி விகிதங்கள் மற்றும் அரச பிணைய விநியோகம் என்பன குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையினால் வட்டி வருமானமும் குறைவடைந்துள்ளது. |
| பெறுமதிசேர் வரி | **275,350** | **230,000** | **219,700** | உள்நாட்டு மற்றும் இறக்குமதி பொருட்கள் இரண்டினதும் கூட்டு விளைவில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக பெறுமதி சேர் வரி வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது. 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் பயன்வலுப் பெறும் வகையில் பெ.சே.வ. விகிதத்தினை 12 சதவீதத்திலிருந்து 11 சதவீதமாக குறைப்பதற்கும், சிகரெட்டு, மதுபானம் மற்றும் மோட்டார் வாகனங்கள் என்பனவற்றுடன் ஏற்புடையதான பெறுமதி சேர் வரி வருமானத்திற்குப் பதிலாக உற்பத்தி வரியினை அமுல்படுத்துவதற்கும் மற்றும் ஏற்புடையன ஏனைய பல வரிகள் இல்லாமற் செய்யப்படுவதற்காக கொள்கை ரீதியான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டமையும், பெறுமதி சேர் வரி வருமானம் வீழ்ச்சியடைய காரணமாய் அமைந்துள்ளது. அவ்வாறே, |


| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பெறுமதி சேர் வரியினை பதிவு செய்வதற்கான முதல் நிலை எல்லையினை வருடமொன்றுக்கு ரூபா.12 மில்லியனிலிருந்து ரூபா.15 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டமையும் பெறுமதி சேர் வரி வருமானம் அதிகரிப்பதற்கு எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்துவதற்கு காரணமாய் அமைந்தது. |
| உற்பத்தி வரி | **256,690** | **469,035** | **497,623** | வரி விகிதத்தினை அதிகரித்தமை, ஏனைய பிற வரிகளுக்குப் பதிலாக உற்பத்தி வரி விதிக்கப்பட்டமை, உள்நாட்டு உற்பத்திகள் அதிகரித்தமை என்பன உற்பத்தி வரி மூலம் திரட்டப்பட்ட வரி வருமானம் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பதற்கு ஏதுவாய் அமைந்தது. யப்பான் யென் ஒன்றின் பெறுமதி தேய்வடைந்நதமை மற்றும் ஒப்பீட்டளவில், குறைந்த மட்ட வரி விகிதங்கள் விதிக்கப்பட்டமை காரணமாக பயனடையும் வகையில் ஈருடக மற்றும் மின்சார மோட்டார் வாகனங்கள் அவ்வாறே, உருளைக் கொள்ளளவானது, 1,000 சி.சிக்கு குறைவான மோட்டார் வாகனங்களின் விலைகள் திருத்தியமைக்கப்பட்டமை என்பன காரணமாக உற்பத்தி வரி அதிகரித்தது. மேலும் வன் மற்றும் மாவூறல் மதுபானம் என்பவற்றின் அதிகரித்த உற்பத்தி, அதிகரித்த உற்பத்தி வரி விகிதங்கள், தேுச கட்டுமான வரி மற்றும் பெ.சே.வ என்பவற்றிற்கு பதிலாக உற்பத்தி வரியினை அறிமுகப் படுத்தியமை என்பன காரணமாக் மதுபானம் மீதான உற்பத்தி வரி அதிகரித்தமையினாலும் உற்பத்தி வரி வருமானம் அதிகரிப்பதற்கு ஏதுவாய் அமைந்தது. |
| இறக்குமதித் தீர்வை. | **81,108** | **92,000** | **132,189** | தேச கட்டுமான வரி மற்றும் பெ.சே.வ. என்பவற்றினை இறக்குமதித் தீர்வையினுள் உள்ளடக்கியமை, நுகர்வுப் பண்டங்களின் இறக்குமதி அதிகரித்தமை மற்றும் தீர்வை விகிதங்கள் அதிகரித்தமை என்பன காரணமாக இறக்குமதி வரி வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 143.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. |
| துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு. | **68,646** | **55,000** | **58,644** | நுகர்வுப் பொருட்கள் இறக்குமதி அதிகரித்தமை காரணமாக துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டு வருமானம் மதிப்பிட்ட வருமானத்தினை விட அதிகரிப்பதற்கு காரணமாய் அமைந்தது. ஏவ்வாறாயினும், மோட்டார் வாகனங்கள் மீதான நிலைய அபிவிருத்தி அறவீடு இல்லாதொழிக்கப்பட்டமை காரணமாக துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு குறைவடைந்துள்ளது. |
| தேசக் கட்டுமான வரி | **44,583** | **48,000** | **45,004** | மதுபானம் மற்றும் புகையிலை தயாரிப்புக்கள் என்பவற்றுடன் தொடர்பான தே.க.வ மற்றும் ஏற்புடையதான ஏனைய வரிகள் இல்லாதொழிக்கப்பட்டதன் காரணமாக உள்நாட்டு செயற்பாடுகள் மீதான தே.க.வ வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், சில்லறை வர்த்தகம், வழங்கல், சேவை, வாடகை, பொருட்கள் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரித்த செயலாற்றுகை, நிதிச் சேவைகள் என்பவற்றினை தே.க.வ அடிப்படையில் உள்ளடக்குதல் மற்றும் நுகர்வுப் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பண்ட இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன காரணமாக இறக்குமதியின் போதான தே.க.வ வருமானம் அதிகரித்துள்ளது. |
| ஏனைய வரிகள் | **125,870** | **146,065** | **140,037** | சீமெந்து, தரை ஓடுகள், அச்சுப் பதிக்கப்பட்ட அல்லது சாயமிடப்பட்ட நெசவு செய்யப்பட்ட பிடவைகள் என்பவற்றின் இறக்குமதி அதிகரித்ததன் காரணமாக இறக்குமதி செஸ் வரி வருமானம் அதிகரித்ததுடன், தேயிலை, இறப்பர் உற்பத்தி பொருட்களுக்கான கேள்வி வீழ்ச்சியடைந்தமையினால் ஏற்றுமதி செஸ் வருமாமும் வீழ்ச்சியடைந்துள்ளது. குறிப்பிட்ட சில வியாபாரப் பண்டங்கள் மீதான விசேட வியாபாரப் பண்ட அறவீடுகள் அதிகரித்தமை மற்றும் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுப் பண்டங்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக விசேட வியாபாரப் பண்டத்தின் செயலாற்றுகையும் அதிகரித்துள்ளது. புதிய தொலை பேசி இணைப்புக்கள் மற்றும் பாவனை அதிகரித்ததன் காரணமாக தொலைத் தொடர்பு அறவீட்டு வரி வருமானமும் அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், ஒப்பீட்டு ரீதியில் நிர்மாணக் கைத்தொழிலில் ஏற்பட்ட குறைந்த வளர்ச்சி வேகம், பங்குச் சந்தையில் அறிக்கையிடப்பட்ட குறைந்த செயலாற்றுகை என்பவற்றிற்கு மத்தியில் ஏனைய வரிகளுக்கு கீழ் திரட்டப்பட்ட வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 96 சதவீதத்தினை அடைந்து கொள்ள முடிந்துள்ளது. |
| வரியல்லாத வருமானம் | **144,844** | **135,500** | **99,099** | வட்டி வருமானம், அரசுடைமை வியாபாரங்கள் மூலம் கிடைக்கின்ற இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் வீழ்ச்சியடைந்தமை, மத்திய வங்கி இலாப சதவீதம் கிடைக்கப் பெறாமை காரணமாக வரியில்லா வருமானம் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்துள்ளது. எவ்வாறாயினும், சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு, விற்பனைகள் மற்றும் அறவீடுகள் மூலம் கிடைக்கப் பெற்ற வருமானங்கள் பாதகமான முறையில் வீழ்ச்சியடைந்துள்ளது. |
| **மொத்தம்** | **1,195,206** | **1,428,200** | **1,454,879** | |

## 2. செயலாற்றுகை - 2015

### 2.1 வருமானம் சேகரிப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள சகல திணைக்களங்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடல்.

பொருளாதார பகுப்பாய்வுகளின் அடிப்படையில், 2015 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் மொத்த வருமானம் 1,454.9 பில்லியன் ரூபாய்களாகும். இது 2014 ஆம் ஆண்டில் அடையப் பெற்ற ரூபா 1,195.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 21.7 சத வீதத்தினால் அதிகரித்துள்ளது. அரசாங்கத்தின் மொத்த வருமானத்தில் வரி வருமானம் ரூபா 1,355.8 பில்லியனாக காணப்பட்ட அதேவேளை வரியல்லாத வருமானமானது ரூபா 99.1 பில்லியனாகக் காணப்பட்டது.



## அரசாங்க வருமானப் பொழிப்பு

**அட்டவணை : 2 அரசாங்க வருமானம்** (ரூபா.மில்)

| விடயம் | 2014 | 2015(ஏற்பாடுகள்) |
|---|---|---|
| **வரி வருமானம்** | **1,050,362** | **1,355,779** |
| வருமான வரி | 198,115 | 262,583 |
| பெறுமதி சேர் வரி | 275,350 | 219,700 |
| தேசக் கட்டுமான வரி | 44,583 | 45,004 |
| உற்பத்தி வரி | 256,691 | 497,623 |
| இறக்குமதித் தீர்வைகள் | 81,108 | 132,189 |
| துறைமுக, வி. நி. அபிவிருத்தி அறவீடு | 68,646 | 58,644 |
| விசேட நுகர்வுப் பண்ட அறவீடு | 47,953 | 52,276 |
| ஏனையவை | 77,916 | 87,760 |
| **வரியல்லா வருமானம்** | **144,844** | **99,099** |
| வட்டி / வாடகை | 13,647 | 7,321 |
| இலாபங்களும் பங்கிலாபங்களும் | 46,814 | 29,798 |
| விற்பனைகளும் கட்டணங்களும் | 35,499 | 44,632 |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்புகள் | 14,919 | 15,213 |
| மத்திய வங்கி இலாப மாற்றல்கள் | 11,500 | - |
| பிற | 22,466 | 2,135 |
| **மொத்த வருமானம்** | **1,195,206** | **1,454,878** |

## 2.3 அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் அமுல்படுத்தப்பட்ட கொள்கை மாற்றங்களு அமைய வரி தொடர்பான சட்ட ஏற்பாடுகளைத் திருத்துதல்.

2015 ஆம் ஆண்டில் அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் பின்வருமாறு.

**I. உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்:**

- **1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (29.01.2015 ஆந் திகதிய 1899/31 ஆம் வர்த்தமானி அறிவித்தல்)**

- மின்சாரக் கார்கள் மற்றும் 1,000 சி.சி க்கு மேற்படாத உருளைக் கொள்ளளவினைக் கொண்ட மோட்டார் வாகனங்கள் மீதான தீர்வை விகிதங்களைக் குறைப்பதற்காக
- ஹைபிரிட் மோட்டார் வாகனங்களுக்கான தீர்வை விகிதங்களை அதிகரிப்பதற்காக.

- **1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (26.02.2015 ஆந் திகதிய 1903/39 ஆம் வர்த்தமானி அறிவித்தல்)**
  - 1000 சி.சி க்கு மேற்படாத ஹைபிரிட் மின்சார வாகனங்கள் மீது ஏற்புடையதான தீர்வை விகிதங்களை திருத்தியமைப்பதற்காகவும் பஸ் வண்டிகள் மீது உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) தீர்வையினை அமுல்படுத்துவதற்காக
  - 29.01.2015 அல்லது அதற்கு முன்பதாக திறக்கப்பட்ட நாணயக் கடிதத்தினைக் கொண்டு தனிப்பட்ட பாவனைக்காக இறக்குமதி செய்யப்பட்டு 2015.03.31 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட ஹைபிரிட் மோட்டார் வாகனங்கள் (2500 சி.சி க்கு மேற்படாத) மீது உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) தீர்வை சலுகையினை வழங்குவதற்காக

- **1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (20.04.2015 ஆந் திகதிய 1911/02 ஆம் வர்த்தமானி அறிவித்தல்)**
  - 2015.02.26 ஆந் திகதிய 1903/39 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் கீழ் வழங்கப்பட்ட உற்பத்தி வரிச் சலுகையினைப் பெற தகுதி பெறும் வகையில் 30.04.2015 ஆந் திகதி வரை வாகன பதிவுக் காலத்தினை நீடிப்பதற்காக

- **1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் ( 02.10.2015 ஆந் திகதிய 1934/40 ஆம் வர்த்தமானி அறிவித்தல்)**
  - சிகரெட் மீதான உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) தீர்வை விகிதத்தினை அதிகரிப்பதற்காக

- **1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் ( 20.11.2015 ஆந் திகதிய 1941/29 ஆம் வர்த்தமானி அறிவித்தல்)**
  - வாகனங்களுக்காக கன சென்றி மீற்றர் அடிப்படையில் அலகு விகிதம் ஒன்றினை அறிமுகப்படுத்தும் வகையில் மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) தீர்வை விகிதங்களைத் திருத்தியமைப்பதற்காக

- **1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் ( 20.11.2015 ஆந் திகதிய 1941/30 ஆம் வர்த்தமானி அறிவித்தல்)**

- திரட்டு நிதியினைப் பயன்படுத்தி அரச நிறுவனங்களினால் நேரடியாக கொள்வனவு செய்யப்படுகின்ற அல்லது நிதிக் குத்தகை மூலம் பெறப்படுகின்ற வாகனங்களுக்காக வழங்கப்பட்ட வரி விலக்களிப்பினை நீக்குவதற்காக,

## II. மதுவரி கட்டளைச் சட்டம்

- **மதுவரி அறிவித்தல் இலக்கம் 974 (2015.02.13 ஆம் திகதிய 1901/19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - ஹோட்டல்கள், ஹோட்டல் தவரணைகள், வாடி வீடுகள் மற்றும் மொத்த, சில்றை விற்பனை நிலையங்களில் வருடாந்த மது விற்பனை உரிமக் கட்டணத்தினைத் திருத்தியமைப்பதற்காக.
- **மதுவரி அறிவித்தல் இலக்கம் 975, 976 மற்றும் 977 (2015.10.02 ஆந் திகதிய 1934/41 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - வன்மதுபானம் மற்றும் மாவூறல் மதுபானம் என்பனவற்றின் மீதான மதுவரி தீர்வை விகிதங்களைத் திருத்துவதற்காக.
- **மதுவரி அறிவித்தல் இலக்கம் 978,979, மற்றும் 980 (2015.11.20 ஆந் திகதிய 1941/31 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - வன்மதுபானம் மற்றும் மாவூறல் மதுபானம் என்பனவற்றின் மீதான மதுவரி தீர்வை விகிதங்களைத் திருத்துவதற்காக.
- **மதுவரி அறிவித்தல் இலக்கம் 981 (2015.12.04 ஆந் திகதிய 1943/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - மாவூறல் மதுபானம் என்பனவற்றின் மீதான மதுவரி தீர்வை விகிதங்களைத் திருத்துவதற்காக.
- **மதுவரி அறிவித்தல் இலக்கம் 982 (2015.12.15 ஆந் திகதிய 1945/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - சாராயம், மாவூறல், வைன் மற்றும் பால் பன்ச் என்பனவற்றில் அங்கீகரிக்கத்தக்க மதுசார செறிவினை வரையறுப்பதற்காக
- **மதுவரி அறிவித்தல் இலக்கம் 983,984 (2015.12.15 ஆந் திகதிய 1945/17 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - மதுபானங்களை காய்ச்சி வடிகட்டல் மற்றும் தயாரித்தல் மீதான வருடாந்த உரிமக் கட்டணங்கனையும், ஹோட்டல்கள், ஹோட்டல் தவரணைகள், வாடி வீடுகள் மற்றும் மொத்த, சில்றை விற்பனை நிலையங்களில் வருடாந்த மது விற்பனை உரிமக் கட்டணத்தினைத் திருத்தியமைப்பதற்காக.
- **மதுவரி அறிவித்தல் இலக்கம் 985 (2015.12.31 ஆந் திகதிய 1947/41 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**

- வெளிநாட்டு மதுபானங்களை நகர்த்துதல் மற்றும் சில்லறை விற்பனை என்பவற்றின் மீது கட்டுப்பாடுகள் விதிப்பதற்காக.

- **மதுவரி அறிவித்தல் இலக்கம் 986 (2015.12.31 ஆந் திகதிய 1947/42 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - ஹோட்டல்கள், வில்லாக்கள் மற்றும் மரபுரிமை ஹோட்டல்கள் என்பவற்றிலிருந்தான நிலுவைக் கட்டணங்களை சேகரிப்பது தொடர்பில் குறித்த அட்டவணையினை மீளக் குறிப்பிடுவதற்காக.
- **மதுவரி அறிவித்தல் இலக்கம் 987 (2015.12.31 ஆந் திகதிய 1947/43 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளு மீதான மதுவரித் தீர்வை விகிதத்தினை அதிகரிப்பதற்காக.

**III. முத்திரை வரி (விசேட ஏற்பாடுகள் ) சட்டம்**

- **2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2015.09.21 ஆந் திகதிய 1933/14 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - ஏதேனும் ஆதனம் ஒன்றுடன் தொடர்புறுகின்ற முறிகளிலிருந்தான முத்திரைத் தீர்வையினைத் திரட்டுவதற்காக

**IV. செஸ் வரி**

- **1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் (2015.11.20 ஆந் திகதிய 1941/32 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - மிளகு, வனிலா,கறுவா, கராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி மற்றும் ஏலக்காய் போன்ற வாசனைப் பொருட்கள் ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அப்பொருட்கள் ஏற்றுமதியின் போது ஏற்புடையதாகவிருந்த செஸ் விகிதங்களை நீக்குவதற்காக.
- **1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் (2015.11.20 ஆந் திகதிய 1941/33 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - பாதணி மற்றும் தைக்கப்பட்ட ஆடைகள் கைத்தொழிலினைப் பாதுகாக்கும் வகையில் இறக்குமதி செய்யப்பட்ட அப்பொருட்கள் மீதான இறக்குமதி செஸ் வரியினைத் திருத்தியமைப்பதற்காகவும், இறக்குமதி செய்யப்பட்ட ஆபரணங்கள் மீது 10 சதவீத செஸ் வரியும் விதிக்கப்பதற்காகவும்
- **1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் (2015.11.12 ஆந் திகதிய 1944/54 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - பீடி இலைகள், மீன்பிடி வலைகள், உராய்வு நீக்கிகள், குளிர்சாதனப் பெட்டிகளுக்கான நிலைக்குத்துப் பெட்டிகள் என்பனவற்றின் மீது விலை ஏற்றத்தாழ்வினைத் தவிர்ப்பதற்காகவும் அற்றிற்கான சந்தைப் போட்டித்

தனமையினை உறுதிப்படுத்தும் வகையிலும் இறக்குமதி செஸ் வரி விகிதங்களைத் திருத்துவதற்காக.

## V. பொருளாதார சேவைக் கட்டணம்

- **2015 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவை கட்டணம் (திருத்தச்) சட்டம்**
  - வருமான நிருவாக முகாமை தகவல் முறைமையினைப் (RAMIS) பிரயோகிக்கும் போது ஏற்படுகின்ற தவறுகளைத் திருத்தும் வகையில் தொழில்நுட்ப திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்காக

## VI. நிதிச் சட்டம்

- **2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம் (2015.05.18 ஆந் திகதிய 1915/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்**
  - 2016 ஆம் ஆண்டு வரை சர்வதேச தொலைத் தொடர்பாடல் இயக்குநர் அறவீட்டு விகிதங்களை அமுல்படுத்துவதற்காக
- **2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம் (2015.12.14 ஆந் திகதிய 1945/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்**
  - சர்வதேச தொலைத் தொடர்பாடல் இயக்குநர்கள் வரியினை ஐ.அ.டொ.09 சதத்திலிருந்து ஐ.அ.டொ.12 சதத்திற்கு அதிகரிப்பதற்காக.
- **2015 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க நிதிச் சட்டம்**
  - மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற மது வரி உரிமையாளர்கள் மீது ஒரு தடவை மாத்திரம் ரூபா. 250,000 இனை வரியாக செலுத்துதல் என்ற மதுச்சாலைகள் மற்றும் தவரணைகள் அறவீட்டுச் சட்டம் அமுல்படுத்துவதற்காக
  - 2013.04.01 அன்று முதல் துவங்கும் வகையில் மதிபீட்டு ஆண்டில் வரிக்கு முந்திய இலாபம் 2,000 மில்லியனுக்கு மேற்படின், அவற்றின் மீது அதியீட்டு வரியொன்று அமுல்படுத்துவதற்காக. இவ்வரி வரி விதிக்கத்தக்க வருமானத்தின் 25 சதவீதம் என்ற விகிதத்தில் அறவிடப்படுகிறது.
  - உரிமம் பெற்ற செல்லிட தொலைபேசி உரிமையாளர்கள் மீது ரூபா 250 மில். ஒரு தடைவ மாத்திரம் வரியாகச் செலுத்துதல் என்ற அடிப்படையில் செல்லிட தொலைபேசி இயக்குநர் அறவீடு அமுல்படுத்துவதற்காக.
  - செய்மதி அமைவிடங்களை சொந்தமாக வைத்துள்ள நபர்கள் மீது ரூபா 1,000 மில். ஒரு தடவையில் வரியாக செலுத்துதல் என்ற அடிப்படையில் செய்மதி அமைவிட அறவீடு செய்வதற்காக

- 1982 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் இயக்கப்பட்ட விளையாட்டு அலைவரிசைகள் மீது ஒரு தடைவ மாத்திரம் ரூபா 1,000 மில். வரியாகச் செலுத்துதல் என்ற அடிப்படையில், அர்ப்பணிக்கப்பட்ட விளையாட்டுக்கள் அலைவரிசை அறவீட்டினை அமுல்படுத்துவதற்காக
- நிதிச் சட்டத்தின் கீழ் அடுக்கு மாடி உரிமையாளர்கள் மீது வருடமொன்றுக்கு ரூபா 1 மில்லியன் இனை மாளிகை வரியாக அமுல்படுத்துவதற்காக
- சீட்டாட்டத் தொழில் ஈடுபட்டுள்ள நபர்கள் மீது ஒரு தடவை மாத்திரம் ரூபா 1,000 மில்லியனை வரியாகச் செலுத்தத்தக்க வகையில் சீட்டாட்டத் தொழில் அறவீட்டினை அமுல்படுத்துவதற்காக
- இலங்கைப் பிரசைகள் நாட்டை விட்டு நிரந்தரமாக குடியகலும் போது நாட்டுக்கு வெளியே கொண்டு செல்லப்படும் அந்நியச் செலாவணியில் 20 சதவீதத்தினை குடியகல்வு வரியாக அமுல்படுத்துவதற்காக.
- வருடமொன்றுக்கு ரூபா 1.5 மில்லியன் மோட்டார் வாகன இறக்குமதியாளர் உரிமக் கட்டணமாக அமுல்படுத்துவதற்காக

## VII. பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு

- **2015 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பந்தய மற்றும் சூதாட்ட (திருத்தச்) சட்டம்**
  - பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு ஏற்படையதான மொத்த வசூலினை 5 பந்தய மற்றும் சூதாட்ட வியாபாரத்தின் மொத்த திரட்டின் 10 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்காக
  - கசினோவுக்கு உள்நுளைபவர்களிடமிருந்து ஐ.அ.டொ 100 இனை நுளைவுக் கட்டணமாக அறவிடுவதற்காக

## VIII. பெறுமதிசேர் வரி

- **2015 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க பெறுமதி சேர்வரி (திருத்தச்) சட்டம்**
  - பெறுமதி சேர் வரி விகிதம் 12 சதவீதத்திலிருந்து 11 சதவீதமாக குறைப்பதற்காக
  - மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் மீதான பெறுமதி சேர் வரியினை செயற்படுத்துவதற்கான புரள்வானது ஏதேனும் பஞ்சாங்க ஆண்டொன்றில் அடுத்துவரும் 03 மாதங்களுக்கு ரூபா 250 மில்லியனிலிருந்து ரூபா 100 மில்லியனுக்கு குறைப்பதற்காக.

- பெ.சே.வ பதிவு செய்வதற்கான முதல் நிலையினை ஆண்டொன்றுக்கு ரூபா 12 மில்லியனிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூபா 15 மில்லியனாக அதிகரிப்பதற்காக
- குறிப்பீடு செய்யப்பட்ட துறைமுக எல்லைகளில் மாத்திரம் பயன்படுத்துவதற்காக இலங்கை துறைமுக அதிகார சபையினால் இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் என்பவற்றுக்காக பெ.செ.வரியினை விலக்களிப்பதற்காக.
- பெ.செ.வரியிலிருந்து விலக்களிப்புச் செய்வதற்கான மாதிரி பெறுமதி எல்லையானது ரூபா 25,000 இலிருந்து ரூபா 50,000 இற்கு அதிகரிப்பதற்காக

## IX. தேச கட்டுமான வரி

- **2015 அம் ஆண்டின் 12 அம் இலக்க தேச கட்டுமான வரி (திருத்தச்) சட்டம்**
  - தே.க.வரியிலிருந்து விலக்களிப்புச் செய்வதற்கான மாதிரி பெறுமதி எல்லையானது ரூபா 25,000 இலிருந்து ரூபா 50,000 இற்கு அதிகரிப்பதற்காக
  - குறிப்பீடு செய்யப்பட்ட துறைமுக எல்லைகளில் மாத்திரம் பயன்படுத்துவதற்காக இலங்கை துறைமுக அதிகார சபையினால் இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் என்பவற்றுக்காக தே.க.வரியினை விலக்களிப்பதற்காக.
  - தே.க.வ முதல் நிலையினை காலாண்டொன்றுக்கு ரூபா.3 மில்லியனிலிருந்து காலாண்டொன்றுக்கு ரூபா. 3.75 மில்லியனுக்கு அதிகரிப்பதற்காக

## X. 2015 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டம்

- உ.போ.செ. வரிக்கான முதல் நிலையானது ரூபா 600,000 இலிருந்து ரூபா 750,000 இற்கு அதிகரிப்பதற்காக.
- உ.போ.செ. வரி வீதம் செலுத்துவதற்கான ஆகக்குறைந்த வீதம் 24 சதவீதத்திலிருந்து 16 சதவீதத்திற்கு குறைப்பதற்காக.
- சிறிய மற்றும் நடுத்தர வணிக நிறுவனங்களின் 12 சதவீத சலுகை விகிதத்திற்கு தகைமை பெறுகின்ற வருடாந்த புரள்வு எல்லையானது ரூபா 500 மில்லியனிலிருந்து ரூபா 750 மில்லியனுக்கு அதிகரிப்பதற்காக.

- விவசாயத் துறைக்கு ஏற்புடையதான 12 சதவீத சலுகை விகித்தினை உள்;ர் சீனிக் கைத்தொழிற்சாலைகளுக்கும் வரிவுபடுத்துவதற்காக
- தனிநபர் வருமான வட்டி மீதான நிறுத்திவைத்தல் வரியினை இறுதியான வரி என்ற வகையில் 2.5 சதவீதத்தில் வரி விதிப்பனவினை அமுல்படுத்துவதற்காக
- சிரேஸ்ட பிரஜைகளுக்கான வட்டி வருமானத்திலிருந்தான நிறுத்திவைத்தல் வரியினை விலக்களிப்புச் செய்வதற்காக

**XI. 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டம் (2015.03.25 ஆந் திகதிய 1907/18 அம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.)**

- அஷ் ஷிபா அமைப்பினை அங்கீகரிக்கப்பட்ட அறக்கொடை நிறுவனமாகப் பிரகடனப்படுத்துவதற்காக

**XII. அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டம்**

- **2003 ஆம் ஆண்டின் 03ம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான கட்டளை (2015.10.02 ஆந் திகதிய 1934Æ34 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை - 2015 இனை வெளியிடுவதற்காக.
- **2003 ஆம் ஆண்டின் 03ம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழான கட்டளை (2015.10.02 ஆந் திகதிய 1934Æ35 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத் திட்ட நிலைமை அறிக்கை – 2015 இனை வெளியிடுவதற்காக
- **2003 ஆம் ஆண்டின் 03ம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழான கட்டளை (2015.10.23 ஆந் திகதிய 1937Æ26 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - இறுதி வரவு செலவுத் திட்ட நிலைமை அறிக்கை (ஆண்டறிக்கை) - 2014 இனை வெளியிடுவதற்காக
- **2003ன் 03ம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 4 ஆம் மற்றும் 7 ஆம் பிரிவின் கீழான கட்டளை (2015.11.20 ஆந் திகதிய 1941Æ28 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)**
  - அரசிறை முகாமைத்துவ அறிக்கை – 2016 இனை வெளியிடுவதற்காக.
  -

## 2.4. 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் அறிக்கைகளை வெளியிடுதல்.

- **வருடாந்த அறிக்கை – 2014**

குறித்த நிதியாண்டு முடிவடைந்து 5 மாத காலம் கழிவதற்கு முன்பு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து பொதுமக்களுக்கு வெளியிடப்பட வேண்டிய இறுதி வரவு செலவுத் திட்ட நிலைமை அறிக்கை, அதாவது 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை 2015 மே மாதத்தில் வெளியிடப்பட்டது.

- **அரையாண்டு அரசிறை நிலைமை குறித்த அறிக்கை – 2015**

குறித்த ஆண்டின் யூன் மாதத்தின் இறுதித் தினத்தன்று அல்லது ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 6 மாதம் கழிவதற்கு முன்பு ஆகிய இரு காலப் பிரிவுகளின் பின்னர் வரும் நாளுக்கு முன்பதாக ஆண்டு தோறும் வெளியிடப்பட வேண்டும் என்பதுடன், 2015 ஆம் ஆண்டின் அரையாண்டு அரசிறை நிலைமை குறித்த அறிக்கை 2015 யூன் மாதத்தில் வெளியிடப்பட்டது.

- **தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை – 2015**

பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தலை நடாத்துமாறு வேண்டப்படுகின்ற கட்டளை அல்லது பிரகடனம் வெளியிடப்பட்டு மூன்று வாரங்களுக்குள் இவ்வறிக்கை வெளியிடப்படுதல் வேண்டும். இதற்கமைய, தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை – 2015 ஆனது 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் வெளியிடப்பட்டது.

- **அரசிறை முகாமைத்துவ அறிக்கை – 2016**

2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 4, 5 மற்றும் 6 ஆவது பிரிவுகளின் கீழ் சமர்ப்பிக்கப்படுகின்ற அரசிறை முலோபாய அறிக்கை 2015 உம், 7, 8 மற்றும் 9 ஆம் பிரிவுகளின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரவு செலவுத் திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை தொடர்பிலான அறிக்கைகள் 2015 இரண்டையும் உள்ளடக்கிய அரசிறை முகாமைத்துவ அறிக்கையானது 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில் வெளியிடப்பட்டது.

# 3. நிர்வாகம் மற்றும் கணக்குகள்

## 3.1 நிறுவனக் கட்டமைப்பு

அரசிறைக் கொள்கைத் திணைக்களம் 65 அனுமதிக்கப்பட்ட பதவியணியினரைக் கொண்டுள்ளது. அதற்கமைய, பின்வரும் அலுவலர்கள் இத்திணைக்களத்தில் பணியாற்றுகின்றனர்.

**அட்டவணை 3: பதவியணி விபரம் - 2015 (2015.12.31 அன்றுள்ளவாறு)**

| புதவி | அனுமதிக்கப்பட்ட பதவியணி | தற்போதைய பதவியணி | பதவி வெற்றிடம் |
|---|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் - இ.நி.சே | 01 | 01 | - |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் - இ.நி.சே. | 01 | - | 01 |
| பணிப்பாளர் இ.நி.சே. | 02 | - | 02 |
| இ.தி.சே | 01 | 01 | - |
| சிரேஷ்ட பொருளியலாளர் | 01 | - | 01 |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர்- இ.நி.சே. | 09 | 07 | 02 |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர்-இ.தி.சே | 04 | 04 | - |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர்-இ.க.சே. | 01 | - | 01 |
| பொருளியலாளர் | 01 | - | 01 |
| புள்ளிவிபரவியலாளர் | 01 | - | 01 |
| நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 01 | - |
| மொழி பெயர்ப்பாளர் | 02 | 01 | 01 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 06 | 03 | 03 |
| அபிவிருத்தி உதவியாளர் | 06 | 03 | 03 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 13 | 12 | 01 |
| சாரதிகள் | 06 | 04 | 02 |
| அலுவலக உதவியாளர் | 09 | 06 | 03 |
| **மொத்தம்** | **65** | **43** | **22** |

## 3.2. மனிதவள அபிவிருத்தி

### 3.2.1 உள்நாட்டுப் பயிற்சிகள்

**அட்டவணை 4 : உள்நாட்டுப் பயிற்சிகள் - 2015**

| பெயர் | பதவி | நிறுவகம் & நிகழ்ச்சித் திட்டம் | பயிற்சிக் காலம் |
|---|---|---|---|
| திரு.எஸ்.பீ.கிரிவத்துடுவகே | உதவிப் பணிப்பாளர் | Master Degree Program Course, Defense Services Command and Staff College. | 01, ஜனவரி - 17, திசெம்பர், 2015 |
| செல்வி.ஆர்.எம்.கே.எம்.லக்மிணி | உதவிப் பணிப்பாளர் | Applied Econometrics practical approach using e views software CBS, Rajagiriya | 21, ஜனவரி - 22, மே, 2015 |

| | | | |
|---|---|---|---|
| திரு. கே.எம். குமாரசிறி | உதவிப் பணிப்பாளர் | Basic Econometrics CBS, Rajagiriya | 21,பெப்ருவரி - 21, ஏப்ரல், 2015 |
| திரு. கே.எம். குமாரசிறி | உதவிப் பணிப்பாளர் | Master of financial Economic, University of Colombo. | ஏப்ரல், 2015 |
| செல்வி.எம்.ஜீ.ஆர்.எஸ்.தனபால | அரச முகாமைத்துவ உதவியாளர் | Government Accounting Procedure | 16, ஒற்றோபர் 2015 |

### 3.2.2 வெளிநாட்டுப் பயிற்சிகள்/ பற்றரைகள்

**அட்டவணை:5 வெளிநாட்டுப் பயிற்சிகள் - 2015**

| பெயர் | பதவி | நிறுவகம் & நிகழ்ச்சித் திட்டம் | பயிற்சிக் காலம் |
|---|---|---|---|
| திரு.ஏ.கே.செனவிரத்ன | பணிப்பாளர் நாயகம் | Driving Government Performance Leadership Strategies that produce result -USA | 20 – 25, செத்தெம்பர், 2015 |
| திரு.ஏ.கே.செனவிரத்ன | மேலதிக பணிப்பாளர் நாயகம் | 1st session of the Economic & Social Commission for Asia and Pacific (ESCAP) | 24 – 30, மே, 2015 |
| திரு. எம்.கே.சீ.சேனாநாயக | பணிப்பாளார் | 6th High Level tax conference for Asian Countries Tokyo | 07 – 09, ஏப்ரல்,2015 |
| திருமதி.டப்.டி.ஏ.பேரேரா | வரி ஆலோசகர் | International Tax Dialogue Conference 2015 Paris- France | 01 – 03, யூலை,2015 |
| திருமதி.டப்.டி.ஏ.பேரேரா | வரி ஆலோசகர | Capacity Building for Tax Administration | 08 – 09, திடிசம்பர்,2015 |
| திரு.ஆர்.எம்.ஆர்.எஸ்.பி. திஸாநாயக்க | உதவிப் பணிப்பாளா | 6th High Level tax conference for Asian Countries Tokyo | 07 – 09, ஏப்ரல்,2015 |
| திரு.கே.கே.ஐ.எரணந்த | உதவிப் பணிப்பாளர் | Strategy of Free Trade Zone for Developing countries - 2015- China | 01 – 21, யூலை,2015 |
| திரு.கே.கே.ஐ. எரணந்த | உதவிப் பணிப்பாளர் | Training work shop on Regional Economic and Financial Monitoring - Korea | 12 – 23, ஒற்றோபர் 2015 |
| திருமதி.ஜே.ஏ.டி.ஆர். ஜயசூரிய | உதவிப் பணிப்பாளர் | Import & Export food inspection officials for Developing Countries - China | 08 – 28, செத்தெம்பர், 2015 |
| திருமதி. எம்.ஏ.என்.ஸீ செனவிரத்ன | உதவிப் பணிப்பாளர் | 7th KEI Student Paper Competition | 16 – 18, திசெம்பர், 2015 |
| திருமதி.ஜே.சந்திரமோகன் | உதவிப் பணிப்பாளர் | Cooperation in Industrial Park Constructed between China and Asian Countries | 27, மே – 18, யூன், 2015 |
| செல்வி.எச்.டீ.ஏ.றுக்ஷிணி | உதவிப் பணிப்பாளர் | Introduction and Utilization of Foreign Capital of Inland Regions for Developing Countries - China | 21,ஒற்றோபர் – 10, நொவம்பர், 2015 |

| | | | |
|---|---|---|---|
| திரு.டி.எம்.எஸ்.ஏ.நிரோஷண | உதவிப் பணிப்பாளர் | Public Finance Management - Singapore Qatar Regional Training | 25 – 30, சனவரி, 2015 |
| திரு.டி.எம்.எஸ்.ஏ.நிரோஷண | உதவிப் பணிப்பாளர் | Custom valuation and Risk Management in Mumbai -India | 01 – 07, பெப்ருவரி, 2015 |
| திரு.டி.எம்.எஸ்.ஏ.நிரோஷண | உதவிப் பணிப்பாளர் | Master Degree Program in Public Policy in Japan -JDS | 16,ஓகத்து, 2015 – 16, ஒற்றோபர், 2017 |
| திரு. கே.எம். குமாரசிறி | உதவிப் பணிப்பாளர் | Economic Growth Mode and Sustainable Development for Developing Countries -China | 02 – 24, யூன், 2015 |
| செல்வி.ஆர்.எம்.கே.எம். லக்மிணி | உதவிப் பணிப்பாளர் | China's Economic and Social Development Experience for Euro Asian Countries - 2015 -China | 01 – 21, யூலை,2015 |
| திருமதி.ஸி.கே.விதாண | அபிவிருத்தி உதவியாளர் | Economic Development - China | 09 – 15, செத்தெம்பர், 2015 |

## 3.3. நிதி நிருவாகம்

### 3.3.1 வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளை பயன்படுத்திய விதம்

2015 ஆம் ஆண்டில் தலைப்பு இல. 238,இன் கீழ் இத்திணைக்களத்திற்கு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டினால் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்ததுடன், அவ்வொதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்ட விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 6: வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளை பயன்படுத்திய விதம் - 2015**

| செலவு விபரம் | 2015 மதிப்பீடு ரூபா | 2015 தேறிய ஒதுக்கீடுகள் ரூபா | 2015 மெயச் செலவு ரூபா |
|---|---|---|---|
| **மீண்டெழும் செலவு** | **75,880,000** | **75,880,000** | **70,433,830.42** |
| ஆள்சார் படிகள் | 25,500,000 | 27,800,000 | 25,568,069.64 |
| பிரயாணச் செலவுகள் | 2,100,000 | 3,900,000 | 3,760,902.32 |
| வழங்கல்கள் | 2,480,000 | 2,480,000 | 1,644,473.96 |
| பராமரிப்புச் செலவுகள் | 3,000,000 | 3,270,000 | 2,747,614.31 |
| ஒப்பந்த சேவைகள் | 42,300,000 | 37,780,000 | 36,088,820.43 |
| மாற்றல்கள் | 500,000 | 650,000 | 623,949.76 |
| **மூலதனச் செலவு** | **2,500,000** | **2,500,000** | **2,226,826.50** |
| புனரமைப்பும் மேம்படுத்தலும் | - | - | - |
| பற்றுதல்கள் | 2,000,000 | 2,000,000 | 1,958,726.50 |
| மூலதன மாற்றல்கள் | - | - | - |
| ஆற்றல் விருத்தி | 500,000 | 500,000 | 268,100.00 |
| **முழு மொத்தம்** | **78,380,000** | **78,380,000** | **72,660,656.92** |

### 3.3.2. அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்கு


2015 ஆம் ஆண்டுக்காக இத்திணைக்களத்தின் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் விபரங்கள் கீழ் வருமாறு அமைகிறது:

**அட்டவணை 7: முற்பணக் கணக்குப் பயன்பாடு - 2015**

| விபரம் | அனுமதித்த எல்லை ரூபா | உள்ளபடியான எல்லை ரூபா |
|---|---|---|
| 1. ஆகக் கூடுதலான செலவின எல்லை | 2,715,000 | 2,134,369.50 |
| 2. ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை | 1,000,000 | 3,257,060.23 |
| 3. ஆகக் கூடுதலான வரவு மீதி எல்லை | 10,000,000 | 6,556,104.63 |

### 3.3.3 கணக்காய்வு ஐய வினா

நிதி அமைச்சின் முகாமைத்துவக் கணக்காய்வுப் பிரிவினால் 07 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும், கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்தினால் 07 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2015ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்றதுடன், அவற்றுக்கான பதில்களும் உரிய காலத்தில் அளிக்கப்பட்டுள்ளன.


gzpg;ghsu; ehafk;
Nkyjpf gzpg;ghsu; ehafk;
gzpg;ghsu;
(tUkhdk;> murpiwf; nfhs;if>
gpujpg; gzpg;ghsu;/ cjtpg; gzpg;ghsh
gpujpg; gzpg;ghsu;/ cjtpg; gzpg;ghsh
gpujpg; gzpg;ghsu;/ cjtpg; gzpg;ghsh
gpujpg; gzpg;ghsu;/ cjtpg; gzpg;ghs
gpujpg; gzpg;ghsu;/ cjtpg; gzpg;ghs
gpujpg; gzpg;ghsu;/ cjtpg; gzpg;ghs
gpujpg; gzpg;ghsu;/ cjtpg; gzpg;ghsh
gpujpg; gzpg;ghsu;/ cjtpg; gzpg;ghsh
gpujpg; gzpg;ghsu;/ cjtpg; gzpg;ghsh;
gpujpg; gzpg;ghsu;/ cjtpg; gzpg;ghsh;
epUthf cj;jpNahfj;ju;
nkhop
Muha;r;rp cjtpahsu;/ mgptpUj;jp cjtpahsu;
mur Kfhikj;Jt cjtpahsu;
rhujpfs;
mYtyf citpahsu;
mur Kfhikj;Jt cjtpahsu;
mYtyf citpahsu;